www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

TFM

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2024

**10** - ஆம் வகுப்பு

# தமிழ்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக. 10 × 1 = 10

1. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை, ஆகியவற்றை குறிக்கும் பயிர்வகை.
அ. குலை வகை ஆ. மணி வகை இ. கொழுந்து வகை ஈ. இலை வகை.

2. எந்தமிழ்நா என்பதை பிரித்தால் இவ்வாறு வரும்.
அ. எந் + தமிழ் + நா ஆ. எந்த + தமிழ் + நா
இ. எம் + தமிழ் + நா ஈ. எந்தம் + தமிழ் + நா

3. "பாடுஇமிழ் பனிக்கடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ. கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ. கடல் நீர் ஒழித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்

4. மலர்க்கை – தொகையின் வகையைத் தேர்க.
அ. பண்புத்தொகை ஆ. உவமைத் தொகை
இ. அன்மொழித்தொகை ஈ. உம்மைத் தொகை.

5. தும்பி – இச்சொல்லின் பொருள்.
அ. தும்பிக்கை ஆ. வண்டு இ. துந்துபி ஈ. துன்பம்

6. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது ------ அணியாகும்.
அ. வஞ்சப்புகழ்ச்சி ஆ. இயல்பு நவிற்சி
இ. இரட்டுறமொழிதல் ஈ. நிரல்நிறை

7. விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு.
– இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.
அ. நிலத்திற்கேற்ற விருந்து ஆ. இன்மையிலும் விருந்து
இ. அல்லிலும் விருந்து ஈ. உற்றாரின் விருந்து

<u>பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (8, 9, 10) விடை தருக.</u>

'அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்
மான விறல்வேள் வயிரியம் எனினே'

8. பாடல் இடம் பெற்றுள்ள நூலைத் தேர்க.
அ. காசி காண்டம் ஆ. முல்லைப்பாட்டு இ. மலைபடுகடாம் ஈ. புறநானூறு

9. பாடலில் கூத்தர் என்பதனைக் குறிக்கும் சொல்.
அ. படுகர் ஆ. வையிரியம் இ. விறல் வேல் ஈ. நரலும்

10. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்.
அ. அலங்கு, சிலம்பு ஆ. அன்று அவன் இ. எய்தி போகி ஈ. நோனா மான



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை அளிக்கவும். 4 × 2 = 8
(15 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்).

11. "மன்னுச் சிலம்பே! மணிமேகலை வடிவே! முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே!" இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங் காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
12. வசன கவிதை குறிப்பு வரைக.
13. விருந்தோம்பல் என்றால் என்ன?
14. மாஅல் – பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.
15. 'அருமை' – எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

III. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்க. 2 × 2 = 4

16. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்.
அ. மலை – மாலை. ஆ. கொடு – கோடு
17. வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக.
ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார்.
18. பகுபத உறுப்பிலக்கணம் தருக.– பொறித்த
19. கலைச்சொற்கள் தருக. அ. Tempest. ஆ. Epic Literature

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. 3 × 3 = 9

20. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?
21. உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான், ------- முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால் ------- உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
22. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
23. " நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா" யார்? அவரைப் பற்றிய குறிப்பு வரைக.

மனப்பாடப் பாடலை எழுதுக. 1 × 3 = 3

24. "சிறுதாம்பு தொடுத்த"---- எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க. 2 × 4 = 8

25. (அ) மாநில அளவில் நடைபெற்ற மரம் இயற்கையின் வரம் எனும் தலைப்பிலான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக. (அல்லது)
ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.
26. அ) புயலின் அறிவிப்பைக் கேட்ட நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தாரையும் காப்பாற்றும் வகையில் செய்யும் செயல்களை வரிசைப்படுத்தி எழுதுக.

VI அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 1 × 8 = 8

27. அ) தமிழரின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.
(அல்லது)
ஆ. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com